உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# முத்திரைத் தீர்வை

## ஒருங்கு கூட்டும் அதிகாரிகள் முத்திரைத் தீர்வைகளைச் செலுத்துதல்

## ஒருங்கு கூட்டப்பட்ட முத்திரைத் தீர்வைக் கூற்றினைச் சமர்ப்பித்தலும் முத்திரைத் தீர்வையினை அனுப்பி வைத்தலும்

2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ்,

அ. காப்புறுதி பூட்கைகளை வழங்குகின்ற எவரேனும் ஆள்,

ஆ. ஊழியர்களுக்குச் செய்யப்படும் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும் 100 இற்கு மேற்பட்ட ஆட்களைத் தொழிலுக்கமர்த்துகின்ற எவரேனும் தொழில்தருநர்.

இ. உரிமங்களை வழங்குகின்ற எவரேனும் அதிகாரி.

ஈ. கடன் அட்டை வசதிகளை வழங்குகின்ற எவரேனும் சேவை வழங்குனர்கள்

உ. மேற்குறித்த சந்தரப்பங்களைச் சார்ந்திருக்கும் வேறு எவரேனும் ஆள்

ஆணையாளர் நாயகத்தினால் எழுத்தில் அனுமதிக்கப்படின், முறையே அத்தகைய காப்புறுதிப் பூட்கைகள், பற்றுச்சீட்டுக்கள், உரிமைக் கோரிக்கைகள், உரிமங்கள் அல்லது ஏனைய சாதனங்கள் தொடர்பில் முத்திரைத் தீர்வை வருமதியாகவுள்ள தொகையினை ஒருங்கு கூட்டுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31, ஜுன் 30, செத்தெம்பர் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவடைகின்ற இயைபான காலாண்டின் முடிவிலிருந்து 15 நாட்களினுள் ஆணையாளர் நாயகத்திற்கு அத்தகைய தொகையினை ஒவ்வொரு காலாண்டும் அனுப்பி வைத்தலும்

**(மேலே (அ) இலிருந்து (உ) வரையில் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளில் ஆகக்குறைந்தது ஏதேனுமொன்றினை மேற்கொள்கின்ற எவரேனும் ஆள், பதிவு செய்திருக்காதிருப்பின், பதிவு செய்து முத்திரைத் தீர்வையினையும் செலுத்துதல் வேண்டும்);**

**ஒவ்வொரு ஒருங்கு கூட்டப்பட்ட அதிகாரியும் இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையிலுள்ள 4153842 எனும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் முத்திரைத் தீர்வைக் கணக்கிற்கு ஒருங்கு கூட்டப்பட்ட முத்திரைத் தீர்வையினைச் செலுத்தமாறும் வரி செலுத்துனர்களின் அனுப்புதல் படிவத்தின் போட்டோ பிரதியினை ஒருங்கு கூட்டும் முத்திரைத் தீர்வைக் கூற்றிலுள்ள திணைக்களப் பிரதி ஒன்று (01) மற்றும் திணைக்களப் பிரதி இரண்டாவது (02) என்பவற்றுடன் இணைத்து அனுப்பி வைக்குமாறு கட்டாயமாக கேட்கப்படுகின்றனர். மேற்குறித்த கூற்றின் வரி செலுத்துனனர்களின் பிரதியானது தங்களின் கோவையில் பேணப்படுதல் வேண்டும். (தயவு செய்து தீர்வை வரிக் கிளைக்கு ஏதேனும் கொடுப்பனவிற்காக காசோலைகளை நேரடியாக அனுப்புவதனைத் தவிர்க்கவும்.)**

வீதக் குறிப்பு மற்றும் கூற்றினை கோவைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் சமர்ப்பித்தல்களையும் அரசாங்க நிறுவன தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகள் என்பனவற்றினையும் www.ird.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்**

**உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.ird.gov.lk**

தயவுசெய்து கொடுப்பனவை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும்

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக